**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 8 இன் 22 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள | நிர்வாக செலவினங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பாக அவதானிப்புடன் இணங்கப்படுகிறது | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு |

| | | |
|---|---|---|
| நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால், எந்தவொரு நிதியேற்பாடும் அங்கீகரிக்கப்படக்கூடாத போதிலும் பதவியணியினரின் பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், விளையாட்டு, பொழுதுபோக்கு, நலன்புரி மற்றும் பாராட்டத்தக்க செயற்பாடுகளுக்காக ரூபா 200,000 தொகையும் நிர்வாகச் செலவினங்களுக்காக ரூபா 256,784 தொகையும் செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டு, நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. | 2020/2021 காலப்பகுதியில் நிலவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக பயிற்சிகள், மதிப்பீடு, நலன்புரி/பொழுதுபோக்கு நடவடிக்கைகள் தொடர்பான தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்கள் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தி நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் குறித்த ஒதுக்கீட்டை பயன்படுத்தி அந்த நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ள தவறியமை தொடர்பாக ஆளுகை சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான செலவினங்களை உரிய ஆண்டின் இலாபத்தில் இருந்து மேற்கொள்ள முடியும் என்பதால் இந்த ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன என சுட்டிக்காட்டப்படுகிறது. குறித்த செலவினம் ஏற்படும் பட்சத்தில் ஆளுகை சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணிப்பீடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு செலவினங்களுடன் தொடர்புடைய அட்டுறு செலவினங்களை சீர்செய்த பின்னர் ஆண்டிற்குரிய செலவினத்திற்கும் நிதி செயவாற்றல் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்ட செயற்பாட்டு செலவினத்திற்கும் இடையே ரூபா 126,798 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் திரண்ட நிதிக்கு வழங்கப்படாமல் காணப்பட்ட ரூபா 126,034.00 தொகையான ஊக்குவிப்பு படி மாற்றத்தை கணக்கீடு செய்தமை மற்றும் ஊக்குவிப்பு படிக் கணக்கில் உத்தியோகத்தர் ஒருவரால் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 76.00 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டமை என்பன குறித்த வேறுபாட்டிற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. | பேரேடு மற்றும் நிதிக்கூற்றுக்களில் கொடுக்கல் வாங்கல்களை சரியாக பதிவு செய்தல். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 யூன் 17 ஆம் திகதிய பிஈடி/3/2015 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் அரச | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்கப்படுகின்றது. ஆளுகை | சட்ட அங்கீகாரத்துடன் மாத்திரமே |

| | | |
|---|---|---|
| உடமையாக்கப்பட்ட நிறுவனங்களின் ஆளுகை சபைகளுக்கு ஊக்குவிப்பு படியை செலுத்தக்கூடிய நிறுவனங்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டுள்ள போதிலும் இந்த நிதியமானது ஆளுகை சபைக்கான படிகளை செலுத்தக்கூடிய நிதியமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. எனினும், சட்டப்பூர்வ அங்கீகாரமின்றி ஆளுகைச் சபைக்கான படிகளாக செலுத்தப்பட்ட ரூபா 114,000 தொகையை உறுதிப்படுத்துவதற்கு ஆளுகை சபையின் வருகைப் பதிவேடு கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை, | சபைக்கான வருகைப் பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிப்பிரமாணம் 877(2)(இ) | | | |
| (i) 04 ஆம் வழிகாட்டலின் 01 ஆம் உப பந்தி | நிதியத்தின் அனைத்து பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ஆதார ஆவணங்களின் அடிப்படையில் பொருத்தமான துணை பேரேட்டுப் புத்தகங்கள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டில் நிதியம் தொடர்பான பேரேட்டுக் கணக்குகள் மற்றும் நாட்குறிப்பு பதிவுகள் சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் I ஆம் பகுதியின் 15.1 ஆம் பந்தியின் கீழுள்ள நிதிப்பிரமாணம் 877(2)(இ) இன் 02 ஆம் வழிகாட்டலின் 01 ஆம் உப பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 445 இன் பிரகாரம் காசுப் புத்தகம், பொதுப் பேரேடு, நாட்குறிப்பு பதிவுகள், முதலீட்டுப் பதிவேடு, பெறுவனவுகள் தொடர்பான பதிவேடு மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான பதிவேடு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆகியன கொடுக்கல்வாங்கல்களின் தன்மைக்கு ஏற்ப உப பதிவேடுகளாக பேணப்படுகின்றன. | |
| (ii) | 04 வழிகாட்டலின் 03 ஆம் உப பந்தி | வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கான அறிக்கை, செயல்நடவடிக்கைத் திட்டத்தின் காலாண்டு முன்னேற்றம் தொடர்பான அறிக்கை போன்ற அறிக்கைகள் காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் பொது நிதித் திணைக்களம் மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்களம் என்பவற்றிற்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கணக்காய்விற்கு எந்த அறிக்கைகளும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் காரணமாக 2021 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகள் தொடர்பான காலாண்டு அறிக்கைகளை உரிய திகதியில் சமர்ப்பிக்க முடியவில்லை எனினும், நான்காம் காலாண்டின் காலாண்டு அறிக்கை உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். | -மேற்படி- |
| (iii) | நிதிப்பிரமாணம் 877(1)(ஈ) | குறிப்பிட்ட ஒரு ஆண்டிற்கான பாதீடு அங்கீகரிக்கப்படாமல் நிதியத்தின் கீழ் எந்தச் செலவினமும் செய்ய முடியாத போதிலும் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணம் பாதீடு - 2022 இலும் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு நிர்வாகச் செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு போதுமானது எனத் தெரிவிக்கப்படுகிறது. 3 ஆண்டுகளுக்கான கணக்காய்வுக் கட்டண கொடுப்பனவிற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பேரில் 2021 ஆம் ஆண்டில் 3 ஆண்டு கணக்காய்வுக் கட்டணங்கள் ஒரே நேரத்தில் செலுத்தப்பட்டுள்ளன. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,946,579 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,089,187 ஆக காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 2,142,608 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வருடாந்த வருமானம் ரூபா 12,254,755 ஆல் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா 10,261,972 ஆல் குறைவடைந்ததை விட நிர்வாக செலவினம் மற்றும் ஏனைய ஒதுக்கீடுகள் ரூபா 695,750 ஆல் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மூன்றாம் காலாண்டில் ஊக்குவிப்பு படியாக ரூபா 11,943,493 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கான குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரம் எதுவும் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் அனைத்து முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகள் தொடர்பான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் கூட்டம் தொடர்பான அறிக்கையில் தொடர்புடைய காலாண்டு மற்றும் கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்ட தொகை முறையே நான்காம் காலாண்டு மற்றும் ரூபா 8,149,600 என பிழையாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் பதிவு செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் தொகை ஆகியன முறையே மூன்றாம் காலாண்டு மற்றும் ரூபா 11,943,493 ஆக திருத்தப்பட வேண்டும் என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். | ஆளுகை சபையின் தீர்மானங்கள் முறையான அங்கீகாரத்துடன் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகனங்களுக்கான பணிப்புரைகளின் (வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) 03(1) ஆம் இலக்க | (அ), (ஆ) மற்றும் (இ) தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக மோட்டார் போக்குவரத்துத் | நிதியத்தின் முக்கிய நோக்கங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட |

பணிப்புரையின் கீழ் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்புகளுக்குத் தகுதியான நான்கு செயற்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் நிதியத்தின் தொடக்கத்திலிருந்து வெகுமதிகளுக்குத் தகுதியான 03 நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகளை நிதியம் மேற்கொண்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிதியத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளல் திருப்தியற்ற மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி மோட்டார் வாகனங்களைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், பொருத்துதல், வடிவமைத்தல், சீரமைத்தல், அல்லது மாற்றியமைத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தரப்பினர் பற்றிய தகவல்களை வழங்குபவர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) சில சட்டவிரோதச் செயல்களை இனங்காண்பதற்கு, அல்லது அத்தகைய சட்டவிரோத செயல்களை வெளிப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்குத் தகவல் அளிக்கும் நபர்களுக்கு வெகுமதி அளித்தல்.

(இ) திணைக்கள பதவியணியினரின் பாராட்டத்தக்க அல்லது பாராட்டத்தக்க நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் ரூபா 50,000 இற்கு மேற்படாமல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.

திணைக்களத்தின் ஆணையாளர்கள், உதவி ஆணையாளர் (தொழில்நுட்பம்) மற்றும் சட்ட உத்தியோகத்தர் உள்ளடங்கிய விசேட மதிப்பீட்டுக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்படி கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேண்டும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் 12 கணக்கு விடயங்களிற்குரிய பாதிடப்பட்ட மற்றும் உண்மையான பெறுமதிகளுக்கு இடையே 19 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இதனால் நிதிக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான கருவியாக பாதீடு பயன்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | வாகன இறக்குமதிக் கட்டுப்பாடு மற்றும் கொவிட் தொற்றுநோய் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை தீர்மானத்தின் விளைவாக வருமானம் குறைவடைந்துள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வட்டி விகிதங்கள் குறைவடைந்ததன் விளைவாக வட்டி வருமானம் குறைவடைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>நாட்டில் நிலவும் கொவிட் தொற்றுநோயின் விளைவாக பதவியணியினரை ஒன்றுசேர்க்க இயலாமையின் காரணமாக பயிற்சி, விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் பதவியணியினரின் பாராட்டத்தக்க அல்லது சிறப்புப் பாராட்டுக்கள் தொடர்பாக குழுவிற்கு அறிக்கையிடாதமை விளையாட்டு மற்றும் பயிற்சிக்கான ஒதுக்கீட்டின் வேறுபாட்டிற்குக் காரணமாகும். ஒரு வருடத்திற்குள் குறைந்தபட்ச எண்ணிக்கையிலான கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டமை, ஆளுகை சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை மற்றும் ஆளுகை சபையின் உபசரணை செலவினங்களின் குறைந்தபட்ச செலவு ஆகியன ஆளுகை சபையின் உபசரணை செலவினங்களில் உள்ள வேறுபாட்டிற்கு பங்களித்துள்ளன என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். | பாதீட்டு தொகைககள் யதார்த்தமாக தீர்மானிக்கப்பட வேண்டும். |